குற்றவியல் நீதித்துறை நடுவர், ஓமலூர்.
சி.சி.196/2017

2021-ம் ஆண்டு நவம்பர் 16 செவ்வாய்கிழமை அரசு/புகார்தாரர்/எதிரி தரப்பு சாட்சியாகிய 3-வது நபரின் வாக்குமூலம் (1969-ம் ஆண்டின் 54-வது விதியின் 9-வது பிரிவின் ஏற்பாட்டின் படி) திருமதி.கலைச்செல்வி என்பவரின் ஆணையிட்டு உறுதிமொழி செய்விக்கப்பட்டு சத்திய பிரமாணம் செய்து வைக்கப்படுகிறது.

| | |
|---|---|
| பெயர் : திரு. லட்சுமணன் | வயது : 34 |
| த/பெ : ஆறுமுகம் | தொழில் : |
| ஊர்: | சமயம் : |
| வட்டம் : | ஜாதி : |
| மாவட்டம் : | |

முதல் விசாரணை .

நான் கீழ் பூாிக்கல் பகுதியில் குடியிருக்கிறேன். நான் தற்போது கார்த்திகேயன் என்ற பேருந்தில் நடத்துனராக வேலை செய்கிறேன். 2014-ம் வருடம் எஸ்.என்.பி பேருந்தில் பயிற்சி நடத்துனராக வேலை செய்தேன். அதே பேருந்தில் குமார் என்பவர் நடத்துனராக இருந்தார். 11.8.2014-ம் தேதி 4.49 மணியளவில் தருமபுரியில் இருந்து சேலம் நோக்கி வந்த பேருந்தில் பணியில் இருந்த போது ஆஜர் எதிரிகளில் ஒருவரான குமாரும், நடத்துனர் குமாருக்கும் இடையே பிரச்சினை நடந்தது. அதில் அவர் நடத்துனர் குமாரை அடித்து விட்டார். இந்த சம்பவம் குறித்து போலீசார் என்னை விசாரிக்கவில்லை.

எதிரிகள் தரப்பில் குறுக்கு விசாரணை. இல்லை.

ஒம்/- லட்சுமணன்

ஒம்/-M.A. சுவேதாரண்யன்,
குற்றவியல் நீதித்துறை நடுவர்(FAC),
ஓமலூர்.